ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ரு’தி$_3$ ॥

# நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ எம்மாவீடு ॥

*This document*[*] *has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*] This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ எம்மாவீடு ॥

## வேண்டிப் பெறுதல் ஈதெனல்

‡எம்மா வீட்டுத்⋆ திறமும் செப்பம்⋆ நின்
செம் மா பாத பற்புத்⋆ தலை சேர்த்தொல்லை⋆
கைம்மா துன்பம்⋆ கடிந்த பிரானே⋆
அம்மா அடியேன்⋆ வேண்டுவதீதே (1)

ஈதே யான் உன்னைக்⋆ கொள்வதெஞ்ஞான்றும்⋆ என்
மை தோய் சோதி⋆ மணிவண்ண எந்தாய்⋆
எய்தா நின் கழல்⋆ யான் எய்த⋆ ஞானக்
கை தா⋆ காலக் கழிவு செய்யேலே (2)

செய்யேல் தீவினை என்று⋆ அருள் செய்யும்⋆ என்
கையார் சக்கரக்⋆ கண்ண பிரானே⋆
ஐயார்⋆ கண்டம் அடைக்கிலும்⋆ நின் கழல்
எய்யாதேத்த⋆ அருள் செய் எனக்கே (3)

எனக்கே ஆட்செய்⋆ எக்காலத்தும் என்று⋆ என்
மனக்கே வந்து⋆ இடைவீடின்றி மன்னி⋆
தனக்கே ஆக⋆ எனைக் கொள்ளும் ஈதே⋆
எனக்கே கண்ணனை⋆ யான் கொள் சிறப்பே (4)

சிறப்பில் வீடு⋆ சுவர்க்கம் நரகம்⋆
இறப்பில் எய்துக⋆ எய்தற்க⋆ யானும்
பிறப்பில்⋆ பல் பிறவிப் பெருமானை⋆
மறப்பொன்றின்றி⋆ என்றும் மகிழ்வேனே (5)

மகிழ் கொள் தெய்வம்⋆ உலோகம் அலோகம்⋆
மகிழ் கொள் சோதி⋆ மலர்ந்த அம்மானே!⋆
மகிழ் கொள் சிந்தை⋆ சொல் செய்கை கொண்டு⋆ என்றும்
மகிழ்வுற்று⋆ உன்னை வணங்க வாராயே (6)

www.prapatti.com

வாராய்⋆ உன் திருப் பாத மலர்க்கீழ்⋆
பேராதே யான் வந்து⋆ அடையும் படி
தாராதாய்⋆ உன்னை என்னுள் வைப்பில்⋆ என்றும்
ஆராதாய்⋆ எனக்கென்றும்⋆ எக்காலே (7)

எக்காலத்தெந்தையாய்⋆ என்னுள் மன்னில்⋆ மற்றெ-
க்காலத்திலும்⋆ யாதொன்றும் வேண்டேன்⋆
மிக்கார்⋆ வேத விமலர் விழுங்கும்⋆ என்
அக்காரக் கனியே⋆ உன்னை யானே (8)

யானே என்னை⋆ அறியகிலாதே⋆
யானே என் தனதே⋆ என்றிருந்தேன்⋆
யானே நீ⋆ என்னுடைமையும் நீயே⋆
வானே ஏத்தும்⋆ எம் வானவர் ஏறே (9)

ஏறேல் ஏழும் வென்று⋆ ஏர் கொள் இலங்கையை⋆
நீறே செய்த⋆ நெடுஞ்சுடர்ச் சோதி⋆
தேறேல் என்னை⋆ உன் பொன்னடிச் சேர்த்தொல்லை⋆
வேறே போக⋆ எஞ்ஞான்றும் விடலே (10)

‡விடலில்⋆ சக்கரத்தண்ணலை⋆ மேவல்
விடலில்⋆ வண் குருகூர்ச் சடகோபன் சொல்⋆
கெடலில் ஆயிரத்துள்⋆ இவை பத்தும்⋆
கெடலில் வீடு செய்யும்⋆ கிளர்வார்க்கே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com